# ஒப்பந்தத் துப்புறவுத் தொழிலகம் தொழிலாளர் வழிகாட்டி

## நீண்ட பணிக்கால விடுப்பு (long service leave) என்றால் என்ன?

நீண்ட பணிக்கால விடுப்பு என்பது பெரும்பாலான நியூ சவுத் வேல்ஸ் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஒரு நன்மையாகும், இதில் ஒரே முதலாளியுடன் பணிபுரிந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டு (2) மாத ஊதியத்துடன் கூடிய விடுப்பு எடுக்கப்படலாம், அத்துடன் முதல் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு ஐந்து (5) வருட பணிக்காலத்துக்கும் ஒரு (1) மாத ஊதிய விடுப்பு.

## துப்புரவுத் தொழிலகம் (cleaning industry) ஏன் வேறுபட்டது?

துப்புரவுத் தொழிலக்கத்தில் 10 ஆண்டுகள் ஒரே முதலாளியிடம் வேலை செய்வது வழக்கத்திற்கு மாறானது. துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இதே போன்ற பலன்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, கையடக்க நீண்ட பணிக்காலத் திட்டம் உருவாக்கப்பட்டது.

## நீண்ட பணிக்காலக் கழகம் (Long Service Corporation) என்றால் என்ன?

நீண்ட பணிக்காலக் கழகம் (LSC) என்பது நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தின் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும், இது ஒப்பந்தத் துப்புரவு மற்றும் கட்டிடம், கட்டுமானத் தொழில்களில் உள்ள தொழிலாளர்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய நீண்ட பணிக்காலத் திட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பாகும்.

## கையடக்க நீண்ட பணிக்காலம் என்றால் என்ன?

தகுதியான துப்புரவுப் பணிகளைச் செய்யும்போது நீங்கள் எத்தனை முதலாளிகளிடம் பணிபுரிந்தீர்கள் என்பதைக் கணக்கில் கொள்ளாமல், உங்கள் நீண்ட பணிக்காலப் பதிவேடு நியூ சவுத் வேல்ஸ் துப்புரவுத் தொழிலகத்தில் பணியை அடிப்படையாகக் கொண்டது. துப்புரவுத் துறையில் நீங்கள் தகுதியான வேலையைச் செய்யும்போது உங்கள் நீண்ட பணிக்காலத் தகுதிகள் தொடர்ந்து வளரும்.

## நியூ சவுத் வேல்சுக்கு (NSW) வெளியே பணிபுரிதல்

குயின்ஸ்லாந்து (QLD), ஆஸ்திரேலியத் தலைநகர் பிரதேசம் (ACT) மற்றும் விக்டோரியா (VIC) ஆகியவற்றில் ஒப்பந்தத்த துப்புரவுத் தொழிலகத்துக்குத் தனித்தனியான திட்டங்கள் உள்ளன. நீங்கள் QLD, ACT அல்லது VIC - இல் பணிபுரிந்தால், அந்த மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள நீண்ட பணிக்காலத் திட்டத்தில் பதிவு செய்ய நீங்கள் தகுதி பெறலாம். பதிவேடு பராமரிப்பு மற்றும் நீண்ட பணிக்கால பண வழங்கீடுகளின் உரிமைகளைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக மாநிலங்களுக்கிடையே பதிவுசெய்யப்பட்ட பணியை LSC அங்கீகரிக்க முடியும்.

குறிப்பு: இத்திட்டத்தின் சட்ட விதிகள் காமன்வெல்த் நிலத்திற்கு பொருந்தாது, எனவே காமன்வெல்த் நிலம் அல்லது காமன்வெல்த் இடத்தில் மேற்கொள்ளப்படும் வேலைகளைப் பதிவு செய்ய முடியாது. அதனால்தான் உங்கள் வருடாந்திர அறிக்கையைச் சரிபார்த்து, உங்கள் தொடர்பு விவரங்கள் எப்போதும் புதுப்பித்த நிலையில் இருக்கிறதா என்பதை உறுதிசெய்துகொள்வது முக்கியமாகும்.

## எவ்வளவு செலவாகும்?

இத்திட்டம் ஊழியர்களுக்கு அவர்களின் ஊதியத்திலிருந்து எதுவும் செலவாகாது, ஏனெனில் வரிகள் தொழிலக முதலாளிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களால் செலுத்தப்படுகின்றன.

### நான் எப்போது விடுப்பு எடுக்க முடியும்?

பணியை விட்டு வெளியேறுதல்

நீங்கள் LSC -இல் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் அங்கீகரிக்கப்பட்ட பணிக்காலத்தைச் சேர்த்திருந்தால் மற்றும் ஒப்பந்தத் துப்புரவுத் தொழிலில் இருந்து நிரந்தரமாகப் பணியிலிருந்து நின்றிருந்தால், நீங்கள் நிரந்தரமாகப் பணி நிறைவுறும் தொழிலாளிக்குப் பணம் வழங்கப்படுவதற்கான விண்ணப்ப (Application for Payment - Permanently Ceasing Worker) படிவத்தைப் பூர்த்தி செய்யலாம்.

- பணியிலிருந்து நிரந்தரமாக வெளியேறி 10 வாரங்கள் கடந்த பிறகு மட்டுமே உரிமை கோர முடியும்
- இந்த அடிப்படையில் நீங்கள் உரிமை கோரினால், நீங்கள் LSC -இல் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளியாக இருப்பது முடிவடைந்து விடும்
- உங்கள் பணத்திலிருந்து அதற்குப் பொருத்தமான விளிம்பு வரி விகிதத்தில் வரி கழிக்கப்படும்.

பணியில் தொடர்ந்து இருப்பது

நீங்கள் LSC -இல் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அங்கீகரிக்கப்பட்ட பணிக்காலத்தைச் சேர்த்திருந்தால் மற்றும் நீண்ட சேவை விடுப்பு எடுக்க விரும்பினால், நீங்கள் பணியில் தொடர்ந்து இருக்கும் தொழிலாளிக்குப் பணம் வழங்கப்படுவதற்கான விண்ணப்ப (Application for Payment - Staying in the Industry Worker) படிவத்தைப் பூர்த்தி செய்யலாம்.

- நீங்கள் தொழிலக உரிமைக் கோரலில் தொடர்ந்த இருப்பதற்குத் தகுதியுடையவராக இருந்தால், நீங்கள் விடுமுறை எடுக்க வேண்டும்
- உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முன், உங்கள் முதலாளியிடம் விடுப்பு எடுக்க ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்தை நீங்கள் முன்னதாக ஏற்பாடு செய்ய வேண்டும் மற்றும் விடுப்பின் காலம் குறைந்தபட்சம் இரண்டு (2) வாரங்கள் கட்டாயம் இருக்க வேண்டும்.
- நீங்கள் எடுக்கும் விடுப்புக்கான வாரத் தொகைக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்படும்
- உங்கள் பணத்திலிருந்து அதற்குப் பொருத்தமான விளிம்பு வரி விகிதத்தில் வரி கழிக்கப்படும்.

### நான் என்ன செய்ய வேண்டும்?

- பதிவு செய்தல் - உங்களின் பதிவு எண், தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண் மற்றும் முகவரி போன்றவை உங்கள் முதலாளியிடம் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். உங்கள் பணிக்காலத்தை LSC -இல் பதிவு செய்ய அவர்களுக்கு இந்த விவரங்கள் தேவைப்படும்.
- உங்கள் தொடர்பு விவரங்களைப் புதுப்பிக்கவும் - உங்கள் பதிவுசெய்யப்பட்ட பணிக்காலத்தைப் பற்றிய முக்கியமான தகவல்களை நாங்கள் உங்களுக்கு மின்னஞ்சல் செய்வோம். www.longservice.nsw.gov.au/online-portal என்ற இணையதளத்தில் உங்கள் விவரங்களைச் சரிபார்த்துப் புதுப்பிக்கவும்
- உங்கள் வருடாந்திர அறிக்கையைச் சரிபார்க்கவும் - ஒவ்வொரு ஆண்டும் உங்கள் அறிக்கை இணையத்தில் கிடைக்கும், அது உங்கள் பதிவுசெய்யப்பட்ட பணிக்காலத்தைக் காட்டும். உங்களின் அனைத்துத் துப்புரவுப் பணிகளும் இந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளச் சரிபார்க்கவும்.

### நீண்ட பணிக்காலம் (long service) என்பது ஓய்வூதியத் தொகுப்பிலிருந்து (superannuation) எவ்வாறு வேறுபடுகிறது?

ஓய்வூதியத் தொகுப்பு என்பது உங்கள் பெயரில் உள்ள ஓய்வூதிய நிதியாகும், அதில் உங்கள் முதலாளி பங்களிப்பு உண்டு. கையடக்க நீண்ட பணிக்காலம் என்பது அனைத்து தொழிலாளர்களின் சார்பாக முதலீடு செய்யப்படும் நிதிகளின் பொதுத்தொகுப்பாகும், அது உங்கள் பெயரில் நேரடியாக ஒரு கணக்கில் வைப்பீடு செய்யப்படுவதில்லை. உங்களிடம் போதுமான பணிக்காலம் இருக்கும்போது, நீங்கள் உரிமை கோரலாம், உங்கள் பணியிலிருந்து விடுப்பு எடுக்கலாம், அத்துடன் பணப்பட்டுவாடா எங்களால் செய்யப்படுகிறது.